©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 253A] சென்னை, வெள்ளிகிழமை, ஏப்ரல் 29, 2022
சித்திரை 16, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/2022**

**2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம் 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 17/2021.**

**17 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டத்தின் 17 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக, பின்தேதியிட்ட அல்லது முன்தேதியிட்ட விதிகளைச் செய்யலாம்."

**சொற்றொடருக்கான மாற்றீடு.**

3. முதன்மைச் சட்டத்தில், "மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள்" எனும் சொற்றொடருக்காக அவை காணப்படுகின்ற மூன்று இடங்களில், "ஊதியங்கள் மற்றும் படித்தொகைகள்" எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 17/2021), தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைமையாளர், துணைத்தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் வழங்க வகைசெய்கிறது. இந்நிகழ்வில், பிற ஆணையங்களைப் போன்றே, கூறப்பட்ட ஆணையத்தின் தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு, மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் வழங்குவதற்கு பதிலாக ஊதியங்கள் மற்றும் படித்தொகைகளை வழங்குவதென அரசானது தற்போது முடிவு செய்துள்ளது. எனவே, அரசானது கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 17/2021–ஐ மேற்சொன்ன நோக்கத்திற்காக திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு.**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டமுன்வடிவின் 3–ஆம் கூறானது, தலைமையாளர், துணைத் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஊதியங்கள் மற்றும் படித்தொகைகளை வழங்க வகைசெய்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவானது இயற்றப்பட்டு மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்படும் போது, மாநில அரசின் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநில அரசின் தொகுநிதியத்திலிருந்து உள்ளாக நேரிடும் செலவினத்தை, இந்த நிலையில், எந்த அளவிலான துல்லியத்துடனும் மதிப்பிட இயலாது.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஏப்ரல் 29.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.